பித்துள்ளதா? இல்லை என்றால், அதற்குக்காலம் நீட்டிக்கப்பட்டு இருக்கிறதா? ஏற்கெனவே இந்த அறிக்கை பெறப்பட்டு, அதன் மீது முடிவு எடுக்கப்பட்டு ஜூன் மாதத்திலிருந்து அவர்களுக்கு உயர்த்தப்பட்ட ஊதியங்கள் வழங்கப்படும் என்று சொல்லப் பட்டிருக்கின்ற காரணத்தால், இதைத் துரிதப்படுத்த அரசும், முதலமைச்சர் அவர்களும் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த அறிக்கை 15 ஆம் தேதி வாக்கில் அரசிடம் வழங்கப்பட இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) ''ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ்'' தொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்குவது குறித்து.

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவை முதலாவதாகத் தொடங்கும்போதே, நான் முதலமைச்சருடைய கவனத்திற்கு ஒரு விஷயத்தைக் கொண்டு வந்திருக்கிறேன். ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் தொழிற்சாலையைச் சேர்ந்த 3 ஆயிரத்திற்கும் அதிகமான தொழிலாளர்கள் 7, 8 மாதங்களாக இன்னும் ஒரு மாத ஊதியமும் பெற முடியாமல், தொடர்ந்து போராட்டத்திலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஆரம்பத்திலே இது சம்பந்தமாக வேண்டிய நடவடிக்கை எடுப்பதாகவும், தொடர்ந்து இங்கேயுள்ள தொழிலாளர் நல அமைச்சர் அவர்களும் சொல்லி வந்தார்கள். ஒரு மாத ஊதியத்தைக் கொடுத்துவிட்டு, தொழிற்சாலையைத் திறந்தால், வேலைக்கு வருவதாகவும், மேற்கொண்டு விஷயங்களைப் பேச்சு வார்த்தைகளின் மூலமாகப் பேசித் தீர்த்துக் கொள்ளலாம் என்றும் தொழிற் சங்கங்களும் ஏனைய சங்கங்களும் தொடர்ந்து சொல்லிக்கொண்டு வருகின்றன. ஒரு மாத ஊதியத்தைக் கூட அவர்களுக்குத் தராமல் 8, 9 மாத ஊதியங்கள் பாக்கியாக இருக்கிற நிலையில், ஒரு மாத ஊதியத்தைக்கூட தராமல் அந்த முதலாளி மறுத்துக்கொண்டு வருகிறார். அதனால் அந்தத் தொழிலாளர்கள் பட்டினி கிடக்கிறார்கள். ஆகவே இந்த சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிய இருக்கிற காரணத்தால், இது சம்பந்தமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலையிட்டு, உடனடியாக அந்தத் தொழிலாளர் களுடைய கஷ்டத்தைப் போக்கக்கூடிய நிவாரண நடவடிக்கைகளை எடுக்கவும், அந்த ஆலையைத் திறப்பதற்கும்,

1989 மே 12] [திரு. சோ. அழகர்சாமி]

அந்தத் தொழிலாளர்களுக்கு முதலாவதாக சொன்னபடி, ஒரு மாத ஊதியத்தை முன்கூட்டியே கொடுப்பதற்காகவும் ஏற்பாடுகளைச் செய்வதற்கும் அரசு முன்வரவேண்டும் என்று கேட்டு, இப் பிரச்சினையை மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. அழகர்சாமி அவர்கள் இங்கு குறிப்பிட்ட இந்தப் பிரச்சினை குறித்து, ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் பிரச்சினை குறித்து, நம்முடைய தொழிலாளர் அமைச்சர் அவர்கள் பலமுறை நிர்வாகத்தின் உறுப்பினர்களோடும், தொழிற்சங்கப் பிரதிநிதிகளோடும் பேசி இருக்கிறார்கள். ஒரு மாதச் சம்பளத்தைத் தருவது என்று உடன்பாடு ஏற்பட்ட போது, நிர்வாகத்தினர் அந்தச் சம்பளத்தைத் தருவதற்காக சென்றபோது, தாக்கப்பட்டதாக ஒரு காரணத்தைக் கூறி, அதனால் மீண்டும் உடன்பாட்டுக்கு வர இயலாது என்று ஒரு சமாதானம் சொன்னதாக எனக்குத் தகவல் கிடைத்தது. இருந்தாலும்கூட, யாரோ ஒரு சிலர் செய்த காரியத்திற்கு ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிற நிலைமையை நாம் ஏற்றுக் கொள்வதற்கு இயலாது. எனவே இந்தப் பிரச்சினையிலே ஒரு சுமூகமான தீர்வுகாண தொடர்ந்து நம்முடைய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் ஈடுபட்டு வருகின்றார். சட்டமன்றக் கூட்டத் தொடரும், பல்வேறு அலுவல்களும் இருந்த காரணத்தால் நான் நேரிடையாக அதிலே ஈடுபட இயலவில்லை. நான் தொழிலாளர் அமைச்சரிடத்திலே இது பற்றிய விவரங்களைக் கேட்டு கூட்டத் தொடர் முடிந்தவுடன் இந்தப் பிரச்சினையிலே தீவிர கவனம் செலுத்தி, தொழிலாளர் நலனுக்காக நிச்சயமாக ஒரு நல்ல முடிவை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) சாத்தூர் கூட்டுறவுப் பயிற்சிப் பள்ளியை மூடும் செயற்குறிப்பு குறித்து.

திரு. வே. தங்கபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காமராசர் மாவட்டத்தில் சாத்தூர் நகரத்தில் 1986ஆம் ஆண்டு முதல் கூட்டுறவு பயிற்சிப் பள்ளி தொடங்கப்பட்டு மிகச் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டு வருகிறது. அரசாங்கம் இந்தக் கூட்டுறவு பயிற்சிப் பள்ளிக்கு இடங்களை வாங்கச் சொல்லி 2 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டு ஒரு கோடி ரூபாயிலே மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு பள்ளிக் கட்டிடங்களும் உணவு விடுதியும் அங்கே தயாராக இருப்பதாக தகவல் வந்திருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் அரசின் சார்பாக ஆணை பிறப்பிக்கப்பட்டு அந்தப் பயிற்சிப் பள்ளியை மூட வேண்டுமென்று உத்திரவு பதிவாளரிடமிருந்து சாத்தூர் துணைப் பதிவாளருக்கு சென்று இருப்பதாக தகவல் வந்திருக்கிறது. இது போன்ற துவக்க நிலையில்